# இந்திய ஆட்சிமன்றம் இப்போது கலைக்கப்படமாட்டாது

புதுடில்லி, நவ. 8

இந்திய ஆட்சிமன்றம் இப்போதைக்குக் கலைக்கப்படமாட்டாது இத்தகவலை இந்தியப் பிரதமர் திருமதி காந்தி இன்று வெளியிட்டார்.

காங்கிரஸ் கட்சியில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நாட்டின் உறுதிப்பாட்டை கெடுத்துவிடாது. நாட்டுமக்கள் எது நடந்தாலும் அதனை தம்போக்கில் தாங்கிச் சமாளித்துக்கொள்வார்கள் என்று திருமதி காந்தி கூறினார்.

பத்திரிகை நிருபர்கள் கூட்டமொன்றில் திருமதி காந்தி பேசினார்

அதிகாரத்துக்காகவும் தனி நபர்களுக்கிடையிலும் காங்கிரஸ்கட்சியில் மோதல் ஏற்படவில்லை. அது கருத்து வேறுபாட்டை அடிப்படையாகக் கொண்டது என்றார் பிரதமர்

காலம்மாறுகின்றது ஆனல் காங்கிரஸ் மாறவில்லை இதனல்தான், முன்பு மக்களால் பெரிதும் விரும்பப்பட்ட காங்கிரஸ் இப்பொழுது அந்த மதிப்பை இழந்துவருகின்றது என்றார்.

கட்சியில் பிளவை நான் உருவாக்கவில்லை. அதனை வேண்டுமென்றே சிலர் செய்கிறார்கள். பல ஆண்டுகளாக இந்த முயற்சி நடைபெற்று வருகிறதென்று கூறிய பிரதமர், நன் கம்யூனிஸ்டாக மாறிவருவதாகவும், கம்யூனிஸ்டுகளின் ஆதரவை எதிர்பார்ப்பதாகவும் கூறப்படுகின்றது.

நமது சில நடவடிக்கைகளை அவர்கள் ஆதரிக்கிறார்கள் என்பதற்காக இப்படிக் கூறுவது சரியல்ல. கம்யூனிஸ்டுகளுக்கும் எமக்கும் எந்த விஷயத்தையும் அணுகும் முறையில் வேறுபாடு இருக்கிறதென்று குறிப்பிட்டார்.

காங்கிரஸ் ஆட்சிமன்றக் குழுவில் நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தவேண்டிய அவசியமில்லை என்றும் அவர் சொன்னார்.


Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

மலர் 11

தபால் பெட்டி எண் 49

போன்: 38)

இதழ்: 270

தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஐப்பசி 24 ஷஃபான் 28 ஞாயிற்றுக்கிழமை [9-11-69]



எல்லோர்க்கும் எமது

தீபாவளி வாழ்த்துக்கள்!

பூரண திருப்தி

அளிப்பது

பி. வி. எம்.

ஒறெஞ்ஜ் பீடி

தயாரிப்பாளர்கள்:

பி. வி. எம்.

ஒறெஞ்ஜ் பீடி கம்பனி

நவாலி றோட், ஆனைக்கோட்டை.

யாழ்ப்பாணம்.



எல்லோருக்கும் எமது

தீபாவளி வாழ்த்துக்கள்!



புத்துணர்ச்சிக்கும்

உற்சாகத்திற்கும்

பாவியுங்கள்

அண்ணா

கோப்பி

அண்ணா இண்டஸ்றி

இணுவில் தெ. ந — இணுவில்


## காங்கேசன்துறை

# துறைமுக வைபவத்தில் தமிழரசார் கலந்துகொள்வர்

## செயல் கமிட்டி தீர்மானம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

காங்கேசன்துறைத் துறைமுக அபிவிருத்தி வேலைகளை இம்மாதம் 16-ம் திகதி பிரதமர் டட்லி சேனநாயக்கா ஆரம்பித்துவைக்கும் வைபவத்தில் தமிழரசுக்கட்சி ஆட்சிமன்ற உறுப்பினர்களும், மேற்சபை உறுப்பினர்களும் கலந்துகொள்வதென்று நேற்று முன்தினம் சாவகச்சேரியில் நடந்த தமிழரசுக்கட்சிச் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

சாவகச்சேரி எம். பி. திரு வி. என். நவரத்தினத்தின் இல்லத்தில் நடந்த இக்கூட்டத்திற்கு கிளிநொச்சி எம். பி. பண்டிதர் க. பொ. இரத்தினம் தலைமைவகித்தார்.

காங்கேசன்துறைத் தொகுதி எம். பி. என்ற முறையில் திரு. எஸ். ஜே. வி செல்வநாயகத்தை தவிர வேறு கட்சித் தலைவர் எவரும் காங்கேசன்துறைத் துறைமுக வைபவப் பேச்சாளர் பட்டியலில் இடம்பெற் ... துரிதப்படுத்துவதோடு கிராமங்கள் தோறும் கூட்டங்கள் வைத்துக் கொள் ... கைகளை மக்களுக்கு விளக்க வேண்டுமென்றும் சிலர் கூறினார்கள்.

## சாராயத்தில் மோசடி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணத்தில் சிலர் சாராயத்தில்மோசடிசெய்து வருவதாக தெரியவந்துள்ளது தவறணைக்கு வெளியில் வெள்ளைச் சாராயம் வாங்கிச் சென்ற ஒருவர் அதை வீட்டிற்கு கொண்டுபோய் பார்த்தபோது அதில் தேநீர் மட்டும் இருந்ததாம் வெள்ளைச்சாராயம் வாங்குவதற்கு கியூவில் நீண்டநேரம் காத்து நிற்க விரும்பாத இவர் தனிப் ... பட்ட நபர் ஒருவரிடம் 2 ரூபா கூடக்கொடுத்து வெள்ளைச்சாராயம் வாங்கியதாக தெரியவருகிறது.

# குறைகள் விரைவில் தீர்க்கப்படும்

## யாழ்ப்பாணத்தில்

## போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் உறுதி

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத் தபால் தந்தித் தொடர்பு இலாகாவின் குறைபாடுகள் யாவற்றையும் விரைவில் தீர்த்துவைப்பதாகச் சமீபத்தில் யாழ். நகருக்கு விஜயஞ்செய்த தபால் தந்திப்பகுதி அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தெரிவித்துள்ளார்.

இங்குள்ள மேற்படி இலாகாக் கட்டிடத்தையும், சுற்றுப்புறத்தையும் ஊழியர்கள் சிரமதான மூலம் சீர்திருத்தியமைத்து தபால் இலாகாவுக்குப் பெருமளவு பணத்தை மீதப்படுத்தியுள்ளமையையிட்டு தபால் அதிபர் மகிழ்ச்சியடைந்தார். 24-10-69 அன்று திரு. வேர்ணன் அபயசேகராவினல் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்படவிருந்த பரிவர்த்தனைக்கருவி, தபால் தந்திப் பகுதியைச் சேர்ந்த அதிகாரி ஒருவரின் தலையீட்டால் ஆரம்பித்துவைக்கப்படவில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் உள்ள இந்த உயர் அதிகாரியின் செயலால் தொலைபேசி பாவனையாளர்கள் தாங்கள் பெறவிருந்த நன்மையை இழந்துள்ளார்கள் யாழ்ப்பாணப் பகுதியில் தபால் சேவையில் ஏற்படவிருக்கும் நன்மைகள் யாவற்றுக்கும் ஒருதடையாக இந்த அதிகாரி உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, வியா

இன்று அதிஷ்டம் பார்க்கப்பட்ட 271-வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

1 வது பரிசு

16 M 0332 ரூ - 100,000

2-வது பரிசு

24 W 0172 ரூ. - 40,000

3-வது பரிசு

21 K 0429 ரூ. - 10,000

தலா 872ரூபா 80 சதம் பெறும் 100 டிக்கட்டுகள் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 40 A 0232 | 40 A 0432 |
| 10 A 0230 | 19 A 0077 |
| 44 B 0170 | 05 B 0605 |
| 13 B 0714 | 48 B 0465 |

| | |
|---|---|
| 05 J 0652 | 35 J 0041 |
| 33 J 0217 | 32 K 0497 |
| 14 K 0191 | 32 L 0266 |
| 20 L 0869 | 07 L 0489 |
| 44 L 0666 | 05 L 0791 |
| 43 M 0858 | 29 M 0120 |
| 42 N 0600 | 31 N 0829 |
| 25 N 0689 | 04 N 0111 |
| 17 O 0664 | 12 O 0702 |
| 42 P 0236 | 36 P 0933 |
| 42 P 0486 | 14 P 0814 |
| 32 p 0300 | 09 P 0900 |
| 38 Q 0906 | 33 Q 0101 |
| 13 Q 0852 | 11 Q 0533 |
| 11 Q 0881 | 37 Q 0719 |
| 40 Q 0309 | 46 Q 0930 |
| 15 R 0680 | 34 R 0689 |
| 19 S 0991 | 22 S 0543 |
| 29 S 0853 | 04 T 0349 |
| 24 T 0621 | 11 U 0259 |

# ஆவலுடன் எதிர்பார்த்த 'ஈழநாடு' தீபாவளி பெருவிழா இன்றுதான்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21 K 0429 ரூ. - 10,000

தலா 872 ரூபா 80 சதம் பெறும் 100 டிக்கட்டுகள் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 40 A 0232 | 40 A 0432 |
| 10 A 0230 | 19 A 0077 |
| 44 B 0170 | 05 B 0605 |
| 13 B 0714 | 48 B 0465 |
| 34 B 0504 | 32 C 0779 |
| 20 C 0605 | 10 C 0511 |
| 15 C 0501 | 24 C 0014 |
| 15 C 0896 | 38 C 0270 |
| 36 C 0856 | 12 C 0875 |
| 22 D 0184 | 13 D 0132 |
| 07 D 0248 | 32 F 0828 |
| 19 F 0323 | 34 F 0170 |
| 36 F 0101 | 02 G 0425 |
| 19 G 0020 | 17 G 0898 |
| 08 G 0642 | 11 H 0802 |
| 18 H 0248 | 19 H 0019 |
| 14 H 0866 | 27 H 0202 |
| 03 H 0892 | 21 H 0228 |
| 15 H 0812 | 11 J 0476 |

| | |
|---|---|
| 32 p 0300 | 09 P 0900 |
| 38 Q 0906 | 33 Q 0101 |
| 13 Q 0852 | 11 Q 0533 |
| 11 Q 0881 | 37 Q 0719 |
| 40 Q 0309 | 46 Q 0930 |
| 15 R 0680 | 34 R 0689 |
| 19 S 0901 | 22 S 0543 |
| 29 S 0853 | 04 T 0349 |
| 24 T 0621 | 11 U 0259 |
| 46 U 0685 | 17 U 0512 |
| 11 U 0353 | 15 U 0857 |
| 19 V 0031 | 36 V 0201 |
| 03 V 0422 | 45 W 0931 |
| 12 W 0866 | 03 W 0468 |
| 24 W 0419 | 45 X 0175 |
| 23 X 0867 | 13 Y 0285 |
| 36 Y 0116 | 43 Y 0783 |
| 06 X 0620 | 04 X 0313 |
| 29 Z 0818 | 40 Z 0456 |
| 40 Z 0277 | 09 Z 0530 |

இவையாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டியவை.

தார்.

காங்கேசன்துறைத் தொகுதி எம். பி. என்ற முறையில் திரு. எஸ். ஜே. வி செல்வநாயகத்தை தவிர வேறு கட்சித் தலைவர் எவரும் காங்கேசன்துறைத் துறைமுக வைபவப் பேச்சாளர் பட்டியலில் இடம்பெற்ருல் தமிழரசுக்கட்சி எம். பி ஒருவரும் இடம்பெறவேண்டுமென்று கோரும் தீர்மானமும் நிறைவேறியது.

தொகுதிகள் தோறும் கிளைகள் நிறுவவேண்டும் என்றும் வாலிபமுன்னணிகளை நிறுவவேண்டுமென்றும் புதிய அங்கத்தவர்களைச் சேர்க்கவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது

**பிரசார வேலை**

தேர்தல் எச்சமயத்திலும் இடம்பெறுயாதலால் தேர்தல் பிரசார வேலைகளைத்

லெபனுனிலிருந்து

## பாலஸ்தீன கமாண்டோக்கள் விலகிக்கொள்கிருர்கள்

கெய்ரோ, நவ 8

பாலஸ்தீன கமாண்டோக்கள் லெபனுனிலிருந்து படிப்படியாக விலகிக்கொண்டிருப்பதாக அங்கிருந்துவெளியான செய்திகள் கூறுகின்றன. ஆனல் முழுமையாக துருப்புக்கள் வாபஸ் பெறப்படுமா என்பது பற்றி எதுவும் கூறிக்கொள்ள முடியவில்லை.

வடக்கு லெபனுனில் தொடர்ந்து பதட்டநிலை இருந்துவருகிறது. பதவியிலிருந்து விலகிக்கொண்ட பிரதமர் திரு. கராமி புதிய மந்திரிசபை ஒன்றை அமைப்பதற்கு சம்மதம் தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீன கமாண்டோக்கள் மீது லெபனுன் துருப்புக்கள் தொடர்ந்து தாக்குதல்களை நடத்திவந்தால் லெபனுன் பிரதமர் திரு. கராமி தமது பதவியை ராஜிஞமாச் செய்து, காபந்துபிரதமராக கடமையாற்றிவந்தது தெரிந்ததே.

## "தமிழ் பிரதேச தம்பதிகள் குடும்பத்திட்டத்தில் ஆர்வம்"

கொழும்பு, ஞாயிறு

"குடும்பத்திட்டம் சம்பந்தமாக பொதுமக்களிடையே நிலவும் ஐயங்களையும், பீதிகளையும் போக்குவதே, எமது தகவல் நிலையத்தின் நோக்கமாகும். கடந்த ஒன்றரை வாரமாக யாழ் தீவுப்பகுதிகளில் எமது தகவல் பிரிவு நடத்திய கருத்தரங்குகள், திரைப்படக் காட்சிகளின் பயனுக, எமது நோக்கம் பெருமளவில் வெற்றியடைந்துள்ளது"

இவ்வாறு குடும்பத்திட்டத்தகவல் நிலைய தமிழ்ப் பிரிவு தகவல் அதிகாரி திருமதி யோகா பாலச்சந்திரன் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

சுமார் ஒன்றரை வாரகாலம் யாழ். குடாநாட்டின் தீவுப்பகுதிகளில் சுற்றுப்பிரயாணம் செய்து, குடும்பத்திட்டம் சம்பந்தமான கருத்தரங்குகளையும் திரைப்படக் காட்சிகளையும் தகவல் அதிகாரி திரு. அன்ரன் குணசேகராவும் உதவித்தகவல் அதிகாரி திருமதி பாலச்சந்திரனும் நடத்தினர்.

"குடும்பத் திட்டத்தில் தமிழ்ப் பிரதேச மக்கள் போதிய அக்கறை காட்டுவதில்லை என்ற குற்றச்சாட்டு ஆதாரமற்றது என்பதை நாம் அவதானிக்கமுடிந்தது. ஒவ்வொரு தம்பதியும், தனது குடும்பத்தை தத்தம் பொருளாதாரவசதிக்கேற்ப அமைக்க வேண்டும் என்பதில் அக்கறை காட்ட ஆரம்பித்துள்ளனர்" என்று அவ்வறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

"கருத்தடை வில்லைகள், லூப் வளையம் ஆகிய இரண்டு முறைகளும் மத்திய தர, கீழ்த்தர மக்களின் ஆதரவை பெருமளவில் பெற்றுள்ளதாகத் தெரிகின்றது. இவ்விரு முறைகளும் உடலுக்குப்பாதகமற்றவை என்பதையும் சிக்கல் இல்லாதன என்பதையும் பலர் அனுபவரீதியாக உணர்ந்துள்ளனர் என்பதையும் நாம் அறிந்கொண்டோம்" என்று திருமதி பாலச்சந்திரன் மேலும் நமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## 60 லட்சம் ரூபா இரத்தினங்கள் கைப்பற்றப்ப டன

கோட்டை, சனி

கல்கிசை கோட்டைப் பகுதிகளிலுள்ள 13 நகைக் கடைகளில் நிலத்தினுள் புதைத்துவைக்கப்பட்டிருந்த 60 லட்சம் ரூபா பெறுமதியான நவரத்தினங்களும் வெளிநாட்டு நாணயங்களும் கண்டுபிடிக்கப்பட்டு எடுக்கப்பட்டுள்ளன.

கடந்தவார இறுதியில் 50க்கும் மேலான வரிமதிப்பாளர்கள் இக்கடைகளுக்குச்சென்று பெறுமதியான கற்களையும் வெளிநாட்டு நாணயங்களையும் எடுத்துள்ளார்கள். இக்கடைகளில் இவற்றுக்கான விபரக்கணக்கோ, பெறுமதியோ குறிப்பிடப்பட்டு வைத்திருக்கப்படவில்லை. இக்கடைகளின் முதலாளிகள் பெரும் நவரத்தினவியாபாரிகள் எனவும் இவர்களிற் சிலர் நிலத்தினுள் மட்டுமன்றி இரும்புப் பெட்டிகளிலும் இவற்றை ஒழித்து வைத்திருந்ததாகப் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்தவியாபாரிகளிற் சிலர் பிறநாட்டு வங்கிகளிலும் பெருந்தொகையானபணம் பாட்டு வைத்திருக்கிருர் களெனவும் கண்டுபிடிக் கப்பட்டுள்ளது.

# ஆவலுடன் எதிர்பார்த்த ஈழநாடு தீபாவளி பெருவிழா இன்றுதான்!

## புதுமையும்வேகமும்கலையும் கானமும்கலந்த நிகழ்ச்சிகள்

— கணேஷ் —

இன்று மலரும் தீபாவளிப் பொன்னுள் நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த 'ஈழநாடு' பெருவிழாவை கண்டு மகிழ்வுறும் பாக்கியத்தையும் தரப்போகிறது.

'என்னையும் கூட்டிச் செல்கிறீர்களா? என்று உங்கள் வீட்டில் கடந்த சில தினங்களாக ஒவ்வொருவரும் கேட்டுவந்த கேள்விக்கு இன்று நல்ல பதில் கிடைக்கப்போகிறது.

புத்தாடைகளை அணிந்து கொண்டு எங்கே செல்வது எனறெல்லாம் முந்திய வருடங்களில் முனகிக் கொண்டிருந்த பலர் இந்த வருடம் 'ஈழநாடு' விழாவுக்கு போகலாம் என்ற நம்பிக்கையில் பல புதிய துணிகளைத் துணிந்து வங்கியிருப்பதாகத் தெரிகிறது

**வேகமும் புதுமையும் வர்ணமும் வேடிக்கை விநோதமும் நகைச்சுவையும் சலங்கை ஒலிக்கும் அற்புத நடனமும் காற்றில் கலந்து கலந்து வரும் இசைவெள்ளமும் உங்களை சொக்க வைக்கப் போகின்றன.**

கண் சிமிட்டும் வானத்துத் தாரகைகள் மண்ணுக்கு வந்து விட்டனவா என ஐயுறும் நிலை உங்களுக்கு இன்று இரவு ஏற்படப் போகிறது. குடைவிரித்துப் பறக்கும் வர்ண வாணங்கள் யாழ். கோட்டை மைதானத்தை இரவு ஆட்சி செலுத்தப்போகின்றன.

இருப்பவர் இல்லாதவர் என்ற வேறுபடின்றி உன்னத நோக்கோடு உதயமாகும் இந்த திருநாளில் உங்கள் உள்ளமெல்லாம் திருநாளின் புனித நோக்கு முழுமையாக நிறைய வேண்டும்என்பதற்காகநடை பெறும்'ஈழநாடு' விழாவில் பலவித நிகழ்ச்சிகள் கண்ணுக்கும்விருந்தளிக்கப் போகின்றன.

என்ன நிகழ்ச்சிகள்நடைபெறப்போகின்றன என்பது பலருக்கு மனப் பாடம் என்பது எமக்கு தெரிந்த விஷயம் இருந்தாலும் ஞாபக சக்தி குறைந்தவர்களுக்கென மீண்டும் ஒரு முறை தருகிறேம்

பிற்பகல் 2 மணிக்கு மாட்டுவண்டில் சவாரி யாழ் முற்றவெளி மைதானத்தில் வேகமாக நடைபெற ஆரம்பிக்கும் காளைகளை கட்டுப்படுத்தி வைத்திருந்தவர்கள் கட்டுப்படுத்த முடியாதபடி வேகத்துக்கும் கட்டுப்பாட்டுக்குமிடையில் வல்லமையை வெளிப்படுத்தும் வீரக் காட்சி அப்பொழுது நீங்கள் கண்பீர்கள்

வீரர்களுக்கும் அவர்களது காட்சியைக் கண்டுகளித்தவர்களுக்கும் காத்திருக்கும் கலை நிகழ்ச்சி மாலை 5-30 க்கு மங்கள இசையுடன் யாழ். திறந்த வெளியரங்கில் ஆரம்பமாகும்

இசைப்பஞ்சமில்லாத

(4-ம் பக்கம் பாக்க)

டெஸ்ட் கிரிக்கெட்

## இந்தியா 104-7

பம்பாய், நவ. 8

இந்தியாவுக்கும்- ஆஸ்திரேலியாவுக்குமிடையில் பம்பாயில் நடைபெறும் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில், இன்றுகாலை ஆஸ்திரேலியாக் கோஷ்டி முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 345 ஓட்டங்களை எடுத்தது.

இந்தியா தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்ததும் விக்கெட்டுகளை அடுத்தடுத்து இழந்த வண்ணமே இருந்தது. இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை இந்தியா 7 விக்கெட்டுகளை இழந்து 104 ஓட்டங்களை மட்டுமே எடுத்திருந்தது.

இந்தியா தனது முதல் இன்னிங்ஸில் மொத்தம் 271 ஓட்டங்களை எடுத்தது.

## பிரதமவிருந்தினர் ஜனுப் ஜாமீல்

யாழ்ப்பாணம், ஞாயி

இன்று நடைபெறும் 'ஈழநாடு' தீபாவளிவிழாவில் பிரதம விருந்தினராகயாழ்ப்பாண நீதிபதி ஜனுப் எம். ஜமீல் கலந்து கொள்கிருர்.


எல்லோர்க்கும்

எமது அன்பு கலந்த

தீபாவளி

வாழ்த்துக்கள்!





வாசிக்காதீர்!

போன்: 410

★ இன்று முதல்

8 மணி நேரத்தில்

உங்கள் தேவையைப் பூர்த்தி செய்யலாம்

★ பாஸ்போர்ட், அடையாள அட்டை, ஏனைய புகைப்படங்கள்

★ புளக்குகள் (BLOCKS)

★ றபர் சீல்

போட்டோஸ்டாட் கொப்பிகள்



மேல் குறிக்கப்பட்ட நேரத்தில் பெற்றுக்கொள்ள

கொழும்பு ஸ்ரூடியோ

யாழ்ப்பாணம்.

எமது ஆதரவாளர்களுக்கு எமது உளங்கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

எந்தக் கடைக்கும் பாவிக்கக்கூடிய ஷோக்கேஸுகள் பல அளவுகளில் விற்பனைக்குண்டு. கணேசன் ஸ்ரோர்ஸ், 63, காங்கேசன் துறைவீதி, யாழ்ப்பாணம், போன்: 7169, 1524

காணி:
யாழ்ப்பாணம் பிரதான வீதியில் 2-ம், 3-ம் குறுக்குத் தெருக்களுக்கிடையில் 5 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு இருக்கிறது. 3 கடைகள் அடங்கிய இக்காணியை கிழக்கில் 3-ம் குறுக்குத்தெருவினாலும் அடையலாம். விரும்புவோர் நேரில் அல்லது தபால் மூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 1527, மே/பா ஈழநாடு', யாழ்ப்பாணம். 1527

நவீன ஜெர்மன் எந்திர சாதனங்களால் தயாரிக்கப்பட்ட திறமான ஒட்டக மார்க் செங்கற்கள விற்பனைக்குண்டு. ஜனுசெங்கல் ஒட்டுத் தொழிற்சாலை, கண்டாவளை. 1533

### தேவை

பளைப்பகுதியில் 40 - 50 ஏக்கருக்குள் தென்னந் தோட்டம் தேவை. விண்ணப்பிக்கவும். 229, நாவலர்வீதி, யாழ்ப்பாணம். 1532

யாழ்ப்பாண முனிசிப்பல் எல்லைக்குள் காலை 6 மணி தொடக்கம் 10 மணி வரை பத்திரிகை விநியோகம் செய்யப் பையன்கள் கோரப்படுகின்றனர் பிணைப் பணம் 750/-மாதச்சம்பளம் 100/- கொடுக்கப்படும். 11-11-69 முன் விண்ணப்பிக்கவும். நியூஸ் டிஸ்ரிபியூட்டேஸ், புஸ்பவில்லா. ஆனைக்கோட்டை. 1529

### ஜோதிடம்

கைரேகை ஜாதகக் குறிப்பு, செவ்வாய் தோஷ சாந்தி விபரமாகச் சொல்லப்படும். எல்லாம் தேவியின் வாக்கு. பத்திரகாளி கோயில், மாகியப்பிட்டி. சண்டிருப்பாய். 1534

## முக்கிய அறிவித்தல்

எமது வட்டுக்கோட்டைக் கிராமசபையில் இறை மதிப்பு வரிவசூலிப்பாளராக (Tax Collector) க்கடமையாற்றி வந்த திரு. செல்லப்பா நடராசா என்பவர் 22-9-69ம் திகதியிலிருந்து சேவையிலிருந்து விலகியிருப்பதால் அவரிடம் எதுவித இறைவரிப்பணமும் செலுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன். அப்படி அவரிடம் கொடுக்கப்பட்ட அல்லது கொடுக்கப்படும் பணத்திற்கு நானும் எமது சபையும் பொறுப்பாளிகளல்ல என்பதை எமது சபையின் வரியிறுப்பாளர்களுக்கு இத்தால் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

ச. நீற்சிங்கம்,
அக்கிராசனர்,
கிராமசபை,
வட்டுக்கோட்டை.
கிராமசபை அலுவலகம்,
வட்டுக்கோட்டை,
6-11-69. 1454


ரஸிகப் பெருமக்களுக்கும் மற்றும் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது
தீபாவளி வாழ்த்துக்கள்
வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி ,6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
தீபாவளியன்று காலை 10-30மணிக் காட்சியுடன் ஆரம்பம்
சிவாஜி - கே. ஆர். விஜயா நடித்த
நெஞ்சிருக்கும் வரை

ரஸிகப் பெருமக்களுக்கும் மற்றும் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது
தீபாவளி வாழ்த்துக்கள்
மனோகரா
யாழ்ப்பாணம்
தினசரி 2-30, 6-30, 9-30
ஜெய்சங்கர்- விஜயநிர்மலா சோ நடித்த
நீலகிரி எக்ஸ்பிறஸ்


## அரசாங்க அறிவித்தல்

**கூட்டுறவு ஊழியர் தராதரப் பத்திரம்—உயர்தரம்.**
**2-1-1970 தொடக்கம் 30-9-1970 வரை**
**யாழ்ப்பாணம்.**

என் 168—அடுத்த கூட்டுறவு ஊழியர் தராதரப் பத்திர உயர்தரத்திற்கான தமிழ் மூலப் பயிற்சி வகுப்பு 1970 தை மாதம் இரண்டாம் திகதி யாழ்ப்பாண கூட்டுறவுப் பயிற்சிப் பாடசாலையில தொடங்கும். இப்பயிற்சி வகுப்புக்கான விண்ணப்பப்பத்திரங்களை கீழ்க்காணும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

தலைமை ஆசிரியர்.
கூட்டுறவுப் பயிற்சிப் பாடசாலை,
111/19, கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

விண்ணப்பங்களுக்கான முடிவு திகதி 22-11-69

**தகுதிகள்**

(அ) கூட்டுறவு ஊழியர் தராதரப் பத்திரம், சாதாரண தரத்தில் சித்தியடைந்ததோடு கூட்டுறவுச் சங்கமொன்றில் தொடர்பாக 3 வருட சேவை செய்தவராக உள்ள பரீட்சார்த்திகள்.

(ஆ) உயர் கல்வி தராதரப் பத்திரம் அல்லது கல்விப் பொதுத்தராதரப் பத்திரத்தில் (உயர்தரம்)மூன்று பாடங்களில் சித்தியடைந்ததோடு, கல்விப்பொதுத் தராதர (சாதாரண தர)ப் பத்திரப் பரீட்சையில், கணிதம், வர்த்தக கணிதம் அல்லது கணக்கு வைக்கும்முறை ஆகிய பாடங்களில் ஒன்றில் தேறியவர்கள்.

(இ) காலி இடங்கள் இருப்பின் கூட்டுறவு ஊழியர் தராதரப் பத்திரம் சாதாரண தரத்தில் முதலாம் பிரிவில் தேறியவர்களுக்கு அவர்கள் சேவைக் காலம் 3 வருடங்களுக்குக் குறைவாக இருப்பினும் இடமளிக்கப்படும்.

2-1-1970 தொடக்கம் 30-9-1970 வரை இப்பயிற்சி வகுப்பு நடைபெறும். இறுதிப் பரீட்சை 1970 ஐப்பசி மாதத்தின் முதல் வாரத்தில் நடைபெறும்.

இப்பயிற்சி வகுப்பில் பாட போதனைக்காகக் கட்டணம் ஏதும் அறவிடப்படமாட்டாது. 2 1/2 மாதங்கள்-3 மாதங்கள் இப்பயிற்சி வகுப்பில் செயல் முறைப் பயிற்சி இடம்பெறும். செயல் முறைப்பயிற்சிக்கான போக்குவரத்துச் செலவுகளையும் ஏனைய செலவுகளையும் பரீட்சார்த்தியே ஏற்கவேண்டும்.

இப்பயிற்சி வகுப்புக்குப்பதிவுக்கட்டணம் ரூபா 10/-
பரீட்சைக்கட்டணம் ரூபா 15/-

பதில் தலைமை ஆசிரியர்.
கூட்டுறவு பாடசாலை,
பொல்கொல்ல,
1969 புரட்டாதி, முதலாம் திகதி. GP 237


ரஸிகப் பெருமக்களுக்கும் மற்றும் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது
தீபாவளி வாழ்த்துக்கள்
ஸ்ரீ காலிங்கா
இணுவில்
தினசரி: 6-30,9-30
பிரிபோயா,போயா 2-30மணி
சிவாஜி-கே. ஆர். விஜயா-பத்மினி நடித்த
இருமலர்கள்

ரஸிகப் பெருமக்களுக்கும் மற்றும் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது
தீபாவளி வாழ்த்துக்கள்
வல்வெட்டித்துறை
றஞ்சனா தியேட்டர்
தினசரி 2-30 6-30, 9-30.
சுந்தரராஜன். - பத்மினி பேபிராணி நடித்த

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

எல்லோர் கும் எமது அன்புகலந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!
'ராதா''
சக்தி பூஜா அகர் பத்தி
ஆலயங்கள்
திருமண வைபவங்கள்
இன்ப நிகழ்ச்சிகளிலும்
உங்கள் இல்லங்களை வாசனையால் பரிமளிக்கச் செய்வது
ராதா சக்தி பூஜா

ரஸிகப் பெருமக்களுக்கும் மற்றும் அன்பர்கள் ஆதரவாளர்களுக்கும் எமது
தீபாவளி வாழ்த்துக்கள்
வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்


## உதைபந்தாட்டம்

# கொழும்புயாழ்.கோஷ்டிகள் இன்றும் நாளையும் மோதும்

யாழ்ப்பாணம், ஞாயிறு
யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தின் அழைப்பின் பேரில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள பிரபலயமான கொழும்புக் கோஷ்டிகளின் உதைபந்தாட்டப் போட்டிகளின் விபரம் வருமாறு:

### இன்றைய ஆட்டம்

3-30-க்கு ஆரம்பமாகும் முதல் போட்டியில், யாழ்ப்பாணம் 'சென். பற்றிக்ஸ் கல்லூரி 'ஏ' பிரிவுக் கோஷ்டியும் — கொழும்பு ''மூசாஜீஸ்'' உதைபந்தாட்டக் கோஷ்டியும் மோதுகின்றன.

4-45-க்கு ஆரம்பமாகும் இரண்டாவது போட்டியில், 'இலங்கை உதைபந்தாட்டச் சங்கத் தலைவர் இளைஞர் கோஷ்டி'யும் — யாழ் உதைபந்தாட்டச் சங்கத் தலைவர் கோஷ்டியும் மோதுகின்றன.

### நாளைய ஆட்டம்

3-30-க்கு ஆரம்பமாகும் முதல் போட்டியில், 'இலங்கை உதைபந்தாட்டச் சங்கத் தலைவர் கோஷ்டி'யும் 'யாழ்.உதைபந்தாட்டச் சங்கத் தெரிவுக் கோஷ்டி'யும் மோதுகின்றன.

4-45-க்கு ஆரம்பமாகும் இரண்டாவது போட்டியில், கொழும்பு ''மூசாஜீஸ்'' கோஷ்டியும் — 'யாழ் உதைபந்தாட்டச் சங்கத் தலைவர் கோஷ்டி'யும் மோதுகின்றன.

இந்த போட்டிகள் யாவும் யாழ். விளையாட்டரங்கில் நடைபெறும். (தே நி)

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**ஞாயிறு 9—11—69**

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6 00 மங்களஇசை, 6-35 சைவ நற் சிந்தனை, 6-40 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம். 7-45 இசைச் சித்திரம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலையஒலிப் பதிவுகள். 8-15 இஸ்லாமிய கீதம், 8-30 தீபாவளி கவியரங்கம். 9-10 நாதஸ்வரம், 10-00 செய்திச்சுருக்கம், 10-03 தீபாவளிவிழா, 11 00 செய்திச்சுருக்கம் 11-03 வாத்திய இசை 11 15 கர்னாடகஇசை.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம். 12-03 தொழிலாளர்கேட்டவை, 1-00 திரைகானம், 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 வளரும்பயிர், 5-45 படத்திலிருந்து.

இரவு6-15இசைப்பயிற்சி, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கர்னாடகஇசை, 7-35 தீபாவளிகலைவிழா, 8-00செய்திச் சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 செய்தித் திரட்டு, 9-45 இசைவிழ நிகழ்ச்சி, 10-30 செய்திச் சுருக்கம்.

## பிரிட்டனில் இனஒற்றுமை

லண்டன், நவ. 8
பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கீழ் இயங்கும் சமூக உறவு கமிஷன், இங்கிலாந்தில் பல்வேறு சமூகங்கள் மத்தியில் இன சௌகரியத்தையும், பரஸ்பர நல்லுறவையும் வளர்ப்பதற்கு பெரும் இயக்கம் ஒன்று ஆரம்பிக்கவிருக்கிறது பிரிட்டன் அடங்கிலுமுள்ள கல்வி ஸ்தாபனங்கள் கல்லூரிகள் வாரியாகா இவ்வியக்கம் மேற்கொள்ளப் படவிருக்கிறது

ஆரம்ப கட்டமாக இவ்வியக்கம் மிட்லண்டஸ், ஜோக்ஷயர், லண்டன், கார்டிவ் ஆகிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் சமூக உறவுக் கமிஷன் இதற்கான ஒத்துழைப்பை இப்பிராந்தியங்களிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களிடம் கோரியுள்ளது. ''சர்வ இன சமுதாயம்'' என்ற பெயரில் கருத்தரங்குகள். மகாநாடுகள், சொற்பொழிவுகள் மூலம் கல்லூரி மாணவர்கள் மத்தியில் இன ஒற்றுமையின் அவசியம் வலியுறுத்தப்படும்.

## முத்தக்காட்சியை எதிர்த்து போராட்டம்

வேலூர், நவ 7
'முத்தக்காட்சிகள் நமது திரைப்படங்களுக்குத் தேவையற்றவை, தமிழ்பண்பாட்டுக்கு ஒவ்வாதவை. இக்காட்சிகளை எதிர்த்து ஒரு போராட்டம் தொடங்கப் படுமானால்அதைமுன்னின்று நடாத்த நான் தயாராகவுள்ளேன்; அத்துடன் மறியல் செய்யவும் தயங்கமாட்டேன்'

இவ்வாறு இங்கு நடைபெறும் பொருட்காட்சியில் தனதுநாடகமொன்றை நடத்தவந்த வில்லன் நடிகர் கண்ணப்பா தெரிவித்தார்

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், தமிழ்த் திரைப்படங்களில் ஆபாசக் காட்சிகள் அதிகமிருப்பதற்குக் காரணம், ரஸிகர்கள் அவற்றை விரும்பிப் பார்ப்பது தானென்றும், தெலுங்கிலிருந்து டப் செய்யப்பட்ட படங்கள் இக்காட்சிகள் நிறைய விருப்பதால் தான் நமது நாட்டில் அதிக நாட்கள் ஓடுகின்றனவென்றும், தற்பொழுது சினிமா நடிகர்களில் பெரும் பாலோர் திரைப்படங்களில் திறமையாக நடித்துக் காட்ட முடியாத புதிய பாத்திரப் படைப்புகளை, நாடகங்களில் நடித்துக் காட்டுவதற்கு வாய்ப்பு அதிகமிருப்பதால் நாடகத் துறையில் ஈடுபட்டு வருகின்றனரென்றும் குறிப்பிட்டார்.


வாடிக்கைக்காரர்கள்
அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது உளங்கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!
S R. S
ஜவுளி மாளிகை
216, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.


களைகள்
எல்லாவற்றையும்
ஒழித்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஸிகப் பெருமக்களுக்கும் மற்றும் அன்பர்கள்
ஆதரவாளர்களுக்கும் எமது
தீபாவளி வாழ்த்துக்கள்

## வின்ஸர் (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

**பட்டுமாமியின் யாழ்ப்பாண விஜயம்!**

தென்னகத்திரைகளில்
100 நாட்களுக்குமேல் ஓடிய
வெற்றிச்சித்திரம்
கலாகேந்திராவின்

# எதிர்நீச்சல்

கதை, வசனம் டைரக்ஷன்
கே. பாலசந்தர்

---

எமது
தீபாவளி வாழ்த்துக்கள்

வல்வெட்டித்துறை
## றஞ்சனா தியேட்டர்

தினசரி 2-30 6-30, 9-30.
சுந்தரராஜன். - பத்மினி
பேபிராணி
நடித்த

**குழந்தைக்காக**

---

ரஸிகப் பெருமக்களுக்கு
தீபாவளி வாழ்த்துக்கள்

**REGAL** JAFFNA

Daily 4 45, 7 & 9-45 p m.
Fredrick Stafford
Peter Van Eyck
in
THE MILLION DOLLAR MAN
(Adults)

---

★ திருமண வைபவங்கள்
★ இன்ப நிகழ்ச்சிகளிலும்
உங்கள் இல்லங்களை வாசனையால் பரிமளிக்கச் செய்வது

## ராதா சக்தி பூஜா அகர் பத்திகளே!

ஏக விநியோகஸ்தர்கள்:

## எஸ் சுப்பிரமணியம் அன் கொம்பனி

53, கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம்.
160, செட்டியார்தெரு, கொழும்பு-11.


போன்: 541 Residence: 7068.

---

ரஸிகப் பெருமக்களுக்கும் மற்றும் அன்பர்கள்
ஆதரவாளர்களுக்கும் எமது
தீபாவளி வாழ்த்துக்கள்

## யாழ். வெலிங்டன்

மற்றும்
6 சினிமாஸ் திரைகளில்
இப்பொழுது திரையிடப்படுகிறது



பத்மஸ்ரீ
★ சிவாஜி கணேசன்
நாட்டியப் பேரொளி
★ பத்மினி
காதல் ராணி
கே. ஆர். விஜயா
ஹாஸ்ய மன்னன்
★ நாகேஷ்
★ மனோரமா ★ முத்துலக்ஷ்மி ★ வி. கே. ராமசாமி
மற்றும் பலர் திறம்பட நடித்த
கமலா பிக்சர்ஸ் அளிக்கும்

# பாலாடை

டைரக்ஷன்
ஏ பீம்சிங்
பாடல்
கண்ணதாசன்
இசையமைப்பு
கே. வி. மகாதேவன்

---

ரஸிகப் பெருமக்களுக்கும் மற்றும்
அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்

## எஸ். ரி. ஆர். பிலிம்ஸ் ஸ்தாபனத்தார்

தமது அன்பு கலந்த

## தீபாவளி வாழ்த்துக்களை

தெரிவிக்கின்றனர்

**ராஜா** யாழ்ப்பாணம்

ஜெய்சங்கர் ★ விஜயகுமாரி
முத்துராமன் ★ வாணிஸ்ரீ ★ நாகேஷ்
நடித்த

# டீச்சரம்மா

---

ரஸிகப் பெருமக்களுக்கும் மற்றும்
அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது அன்புகலந்த

## தீபாவளி வாழ்த்துக்கள்!

## ராணி சினிமா யாழ்ப்பாணம்

தினசரி 3 காட்சிகள்

ஜெமினி கணேசன் ★ சரோஜாதேவி
விஜயஸ்ரீ ★ நாகேஷ்
நடித்த
கே. எஸ். கோபாலகிருஷ்ணனின்

# குலவிளக்கு

---

# எல்லாவற்றையும் ஒழித்து விளைச்சலைப் பெருக்க

புதிய சீர்ப்படுத்திய

# ஸ்டாம் எப்-34




புதிய, சீர்ப்படுத்திய "ஸ்டாம்" எப் - 34, உங்கள் விளைச்சலைச் சூறையாடும் புற்கள், முட்சோரைப் புற்கள், அகன்ற இலைக்களைகள் அனைத்தையும் தேர்ந்து அழித்து ஒழிப்பதின் மூலம் அமோக நெல் வேளாண்மைக்கு உத்தரவாதமளிக்கிறது.

புதிய, சீர்ப்படுத்திய "ஸ்டாம்" எப் - 34 இல் 36% டி. பி. ஏ. இடம் பெற்றுள்ளது. இக் களைப்புற்கொல்லி தெளிகருவியின் பீச்சு முனைகளில் கட்டி பட்டு அடைத்துக் கொள்வதில்லை. இதனை அடைப்பத் தெளிகருவி மூலமோ மிஸ்ட் புளோவர் மூலமோ தெளிக்கலாம். முன்னைப் பொழுதைப பார்க்கிலும் சிறப்பான வகையில் இது களைகளைக் கட்டுப்படுத்துகிறது.

அதிக நெல பயிரிட்டுக் கூடுதல் இலாபம் சம்பாதிக்க உபயோகியுங்கள் "ஸ்டாம்" எப் - 34.

ஷெல ரசாயனப பொருட்கள் SHELL

*ரசாயனப்பொருளை நினையுங்கள், ஷெல்லை நினையுங்கள்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திரா - நிஜலிங்கப்பா

# பேச்சுவார்த்தையில் முட்டுக்கட்டை விட்டுக்கொடுக்க இருவரும் மறுப்பு

புதுடில்லி, நவ. 8

காங்கிரஸ் கட்சியில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை ஒரு முடிவுக்கு கொண்டுவருவதற்காக பிரதமர் திருமதி இந்திரா காந்தியும், காங்கிரஸ் தலைவர் திரு நிஜலிங்கப்பாவும் நடத்திய பேச்சு வார்த்தைகள் முட்டுக்கட்டையில் முடிந்தது.

**இருதலைவர்களும் தங்கள் நிலைகளை விட்டுக் கொடுக்காததால் சமரசப்பேச்சு வார்த்தைகள் முறிந்துவிட்டதாக அறியப்படுகின்றது.**

காங்கிரஸ் தலைவர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலை தவிர்க்கவும் பிளவு ஏற்படாமல் தடுக்கவும் மைசூர் முதலமைச்சர் புது டில்லியில் பெருமுயற்சி செய்தார் இரு தலைவர்களையும் சந்தித்துப் பேசவைப்பதில் அவர் வெற்றி பெற்றார்.

காங்கிரஸ் தலைவர் திரு நிஜலிங்கப்பாவும் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தியும் நேற்று பகல்உணவின் போது சந்தித்துப் பேசினார்கள். ஆனால் பேச்சு வார்த்தைகள் தோல்வியில் முடிவடைந்தன.

காங்கிரஸ் கட்சியில் தலைவர்கள்தேர்தல் உட்பட ஒரு மட்டான அளவில் ஸ்தாபன தேர்தல்களை நடத்த வேண்டுமென்று பிரதமர் கோரியதாகவும் திரு நிஜலிங்கப்பா இணங்க மறுத்துவிட்டார் என்றும் தெரிகின்றது கட்சியின் அடிநிலையிலிருந்து தேர்தல்களை நடத்த வேண்டும் என்று திரு நிஜலிங்கப்பா விரும்பியதாகவும் இதனால் காலதாமதம் ஏற்படும் என்று திருமதி காந்தி கருதியதாகவும் தெரிகின்றது. தேர்தல் சம்பந்தமான கோரிக்கையை முறைப்படி எழுதிக் கொடுத்தால்தாம் காரியக் கமிட்டியில் தாக்கல் செய்வதாக திரு நிஜலிங்கப்பா தெரிவித்ததாகத் தெரிகின்றது.

காங்கிரஸ் தலைவரின் இந்தப் போக்கின் நிமித்தம் மேற்கொண்டும் பேச்சுக்களைத் தொடர்வதால் பயன் ஏதும் ஏற்படப் போவதில்லையென்று திருமதி காந்தி நேற்று டெலிபோன் மூலம் திரு நிஜலிங்கப்பாவுக்கு அறிவித்து விட்டார்,

பேச்சுக்களைத் தொடர்வதற்கான அடிப்படையெதுவும் இல்லையென்று திரு நிஜலிங்கப்பாவும் நிருபர்களிடம் கூறினார்.

காங்கிரஸ் காரியக் கமிட்டியிலிருந்து நீக்கப்பட்ட மூவரை மீண்டும் சேர்க்க வேண்டும் என்று திருமதி காந்தி வற்புறுத்தியதாகவும் திரு மொரார்ஜி உட்பட விலக்கப்பட்ட மந்திரிகள் விஷயத்தை திரு நிஜலிங்கப்பா கிளப்பியதாகவும் அவர் நிருபர்களிடம் தெரிவித்தார்.

## அதிபர் நாஸர் தவருகஎண்ணுகிருராம்

நியுயோர்க், நவ 8

''ஐக்கிய அரசுக்குடியரசு அதிபர் நாஸர் அமெரிக்காவை தமது நாட்டின் எதிரிஎன்று தவருக எண்ணிக் கொண்டிருக்கிருர்'' என்று அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு. வில்லியம் ரோஜர்ஸ் கூறினர்.

இஸ்ரேலுக்கு உதவுவதின் மூலம் சண்டையைத் தூண்டி வருவதாக அமெரிக்காமீது அதிபர் நாஸர் அண்மையில் குற்றஞ்சாட்டினர். எகிப்திய ஆட்சிமன்றத்தில் பேசிய அதிபர் நாஸர் இஸ்ரேலுடன் அமைதியை விரும்புகிறேம் ஆருல்சரணுகதி மூலமான அமைதியை அல்ல என்ருர். அதிபர் நாஸரின் பேச்சு பற்றிய தமது கருத்தை வெளியிடுகையிலேயே அமெரிக்க மந்திரி திரு. ரோஜஸ் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

மேற்காஸியாவில் நிரந்தரமான அமைதியையே அமெரிக்காவிரும்புகின்றது. அதிபர் நாஸரின் பேச்சு அமைதிக்காக நடைபெற்று வரும் முயற்சிகளுக்கு தடையாக இருக்கப்போகின்றன வென்று அவர் கவலை தெரிவித்தார்.

## காண்டாமிருகத்துக்கு பெரும் கிராக்கி

புதுடில்லி நவ. 8

பாரதத்தில் காண்டா மிருகங்கள் ஒவ்வொன்றும் ரூபா ஒருலட்சமாக விலைப்படுகிறதாம் அமெரிக்க அரசாங்கத்திடமிருந்தும் 3 காண்டா மிருகங்களுக்கு தற்போது ஆடர் வந்துள்ளதாம். மூன்றினதும் விலை 3லட்சம் ரூபாய் ஆகும்,

இதுவரை காண்டா மிருகத்தின் கொம்பின் மூலம் 33லட்சம் ரூபாய் வருவாய் கிடைத்துள்ளதாம்

## கென்யா ஆட்சிமன்றம் கலைக்கப்பட்டது

### பொதுத்தேர்தலுக்கு ஏற்பாடு

நைரோபி. நவ 8

கென்யாஆட்சிமன்றத்தை அதிபர் ஜோமோ கென்யாட்டா கலைத்திருக்கிருர்.

கென்யாவில் முதலாவது பொதுத் தேர்தலை நடத்துவதற்காக அதிபர் ஆட்சிமன்றத்தைக் கலைத்துள்ளனர். தற்பொழுது கென்யாவில் எதிர்க்கட்சி எதுவுமில்லை. எதிர்க்கட்சியாகவிருந்த கென்யா மக்கள் யூனியனை அண்மையில் அதிபர் கென்யாட்டா தடை செய்தார். இந்தக் கட்சி அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு முயற்சி எடுத்ததாகவும், நாசவேலைகளில் இறங்கியதாகவும் கூறி கென்யா மக்கள் யூனியனை அவர்தடை செய்தார். இந்தக் கட்சியின் தலைவர் திரு ஓகிங்கா ஓடிங்காவும் உபதலைவரும் அண்மையில் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டனர். அந்தக்கட்சியைச் சேர்ந்தஇதர ஆட்சி மன்ற உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டனர்.

## ஒருகுழந்தைக்கு ஆசை: பிறந்தது நான்கு

நியூயோர்க், நவ 6

குடும்பக்கட்டுப்பாட்டுக்காக கர்ப்பத்தடை மருந்துகளை உபயோகித்து வந்த 26 வயது நிரம்பிய ஒரு பெண்மணிக்கு ஒரே சூலில் 4 ஒரேமாதிரியான குழந்தைகள் பிறந்துள்ளன. ஏற்கனவே ஒரு குழந்தைக்குத் தாயான திருமதி டாக்வெல்என்பவருக்கு இன்னும் ஒரு குழந்தைதமக்குபிறக்கவேண்டும் என்ற ஆசையினல் கர்ப்பத்தடை மருந்து உபயோகிப்பதை இடைநடுவில் நிறுத்திஞராம்

ஒரு குழந்தை பிறக்க வேண்டுமென்று விரும்பிய இவருக்கு ஒரே தோற்றமுடைய நான்கு குழந்தைகள் பிறந்துளளனவாம்.

ஒரே மாதிரியான குழந்தைகள் இவ்வாறு பிறப்பது ஒரு கோடிக்கு ஒன்று என்றவிகிதப்படியே நடைபெறுவதாகவும், சில ஆச்சரியத்துக்கிடமான பிறப்பு என்றும் கூறப்படுகிறது. ஒன்றரை ருத்தல் முதல் 3ருத்தல்வரைநிறையுள்ள இக்குழந்தைகளில் ஒருகுழத்தையின் நிலைமை மட்டும் கவலைக்கிடமாகவிருக்கிறதாம்.

## ஆண்டுவிழாவும் தீபாவளிவிழாவும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அல்வாய் வடக்கு இளங்கோ சனசமூகநிலைய முத்தமிழ் மன்றத்தின் 21-வது ஆண்டு விழாவும் தீபாவளி விழாவும் இன்று பிற்பகல் 2-30 மணிக்கு ஸ்ரீலங்கா வித்தியாசாலை மைதானத்தில் நடைபெறும் விளையாட்டுப்போட்டியுடன் ஆரம்பமாகின்றன.

இரவு 7 மணியளவில் கவிஞர்கள் செ. சுந்தரம்பிள்ளை, அரியாலை வே ஐயாத்துரை ஆகியோர் பாராட்டப்படுவதுடன் பல கவிஞர்கள் பங்குபற்றும் கவியரங்கும், நாடக, நடன கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன.

## சுரங்க விபத்தில் 65 பேர் பலி

ஜோகன்னர்ஸ்பேர்க், நவ. 8

தென்னுபிரிக்காவில் சுரங்கமொன்றில் ஏற்பட்ட விபத்தில் 65 பேர் பலியானர்கள் உரோமியமும் தங்கமும் வெட்டி எடுப்பதில் இந்த சுரங்கத் தொழிலாளர் ஈடுபட்டிருந்தார்கள்.

## ஆசிரியர்கலாசாலை அமைச்சர் சபை

சுழிபுரம், சனி

கொழும்புத்துறை அரசினர் ஆசிரிய கலாசாலை புதிய அமைச்சர் சபை தெரிவு வருமாறு:

பிரதமர்: சி. கணபதிப்பிள்ளை. நிதி: சூ. மரியாம்பிள்ளை. சுகாதாரம்: பி. பாக்கியநாதர்; கல்வி: இ. கனகேந்திரம், தொழில்: மு கிருஷ்ணன், கலாச்சாரம்: வே. பாலசுந்தரம்,

## 'புகைப்பது கெடுதி என்று சிகரெட்டில் எழுதவேண்டும்'

### அமெரிக்க செனட்டில் தீர்மானம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**ஆனந்தமாக வாழுங்கள்!**

★ உங்கள் மகன் படித்துப் பட்டம்பெற்று புகழும் பணமும் சம்பாதிக்க வேண்டும்.

★ உங்கள் மகள் போதிய கல்வி அறிவுபெற்று நல்லதொரு கணவரை அடையவேண்டும்.

காங்கேசன்துறை ஆஸ்பத்திரி

## ஊழியர் தற்காலிக வேலை நீக்கத்திற்குக் கண்டனம்

மாவிட்டபுரம், ஞாயிறு

காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரியில் கடமையாற்றிய நான்கு ஊழியர்களிடமும் எவ்வித விளக்கமும் கோராமல் தற்காலிக வேலைநீக்கம் செய்ததுஅநீதியான செயல் இது கண்டிக்கத்தக்கது இச் சர்வாதிகாரமான இப் போக்குக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுப்பது எமது கடமைஎன தேசிய அரசாங்க சுகாதார சேவைத் தொழிலாளர்சங்க காங்கேசன்துறை வைத்தியசாலை ஸ்தாபனத்தின் விசேஷ பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அகில இலங்கை சுகாதார தொழிலாளர் சங்கச் செயலாளர் திரு சிவசுப்பிரமணியம் கூறினர்.

காங்கேசன்துறை தமிழ்க்கனல் மன்ற மண்டபத்தில் திரு எ.எஸ். அருமைநாயகம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு பி. தேவராசா உட்பட மற்றும் பலர் பேசினர்கள்.

இதையடுத்து நிறைவேறிய தீர்மானங்க்ள் பின்வருமாறு;-

1. காங்கேசன்துறைவைத்தியசாலையில் சுகாதார சேவையாளர்கள்' சேவை இடைநிறுத்தம் செய்யப்படுவதற்கு கையாளப்பட்ட நடவடிக்கை ஒழுங்கற்றது. எனவே உடன் இடைநிறுத்தத்தை வாபஸ்பெறுமாறு கோருதல்.

தகுந்த பாதுகாவலின்றி பெண் பரிசாரகர்களை பொலிஸ் நிலையத்திற்கு அனுப்பியமைக்கு எமதுசங்கம் கண்டனம் தெரிவிக்கிறது

வாந்தி எடுத்த சுகவீனமான பெண் பரிசாரகர்களுக்கு வைத்தியம் செய்யப்படாமல் அலட்சியம் செய்யப்பட்டதை இச்சபை வன்மையாகக் கண்டிக்கிறது,

உடுப்பிட்டி கிராமசபை

## மின்சார விநியோகத்துக்கு ரூ. 35, 000 மேலதிக ஒதுக்கீடு

உடுப்பிட்டி ஞாயிறு,

உடுப்பிட்டிக் கிராமசபையின் 1970-ம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தில் மின்சார விநியோகத்திற்காக முன்னைவிட 35,000 ரூபா மேலதிகமாக ஒதுக்கப்படவிருக்கின்றது. கிராமசபைத்தலைவர் திரு. ஆர். ஆர். தர்மரத்தினம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

உடுப்பிட்டிக்கிராமசபைப் பகுதிக்கு மின்சார விநியோகம்செய்வதற்காகக் கோரப்பட்ட கேள்விப்பத்திரங்கள் பரிசீலனை செய்யப்பட்டபின் கூடுதலாக80,000ரூபா தேவைப்படுவதாகவும், இதில் 35.000 ரூபாவைக் கிராமசபை நிதியிலிருந்தும், மீதி 45,000 ரூபாவைக் கடன்அபிவிருத்திச்சபையிடமிருந்தும் பெறவேண்டுமென மின்சார இலாகா ஜெனரல் மனேஜர் உடுப்பிட்டிக் கிராமசபைக்கு அறிவித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்தே கிராமசபைத் தலைவர் அடுத்த வருடத்திற்கான வரவு செலவுத் திட்டத்தில் மின்சாரத்திற்குக் கூடுதல்பணம் ஒதுக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து சோலைவரியை ஆறுவீதமாக அதிகரித்து அறவிடுவதின் மூலம் இப்பணத்தை ஈடு செய்யலாம் என உடுப்பிட்டிக் கிராமசபை அபிப்பிராயம் தெரிவித்துள்ளது.

## மரம் நாட்டினர்

சுழிபுரம், சனி

வட்டுக்கோட்டை கிராமசபைக்கு சொந்தமான விளையாட்டுத் திடலில் கிராமசபைத் தலைவர் என். நிற்சிங்கம் ஜே.பி. மரம் நாட்டு வைபவத்தை ஆரம்பித்து வைத்தார்.

வாடிக்கைக்காரர்கள்
மற்றும்
அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது அன்புகலந்த
**தீபாவளி வாழ்த்துக்கள்!**

## ஆனந்தமாக வாழுங்கள்!

★ உங்கள் மகன் படித்துப் பட்டம்பெற்று புகழும் பணமும் சம்பாதிக்க வேண்டும்.

★ உங்கள் மகள் போதிய கல்வி அறிவுபெற்று நல்ல தொரு கணவரை அடையவேண்டும்.

★ அனைத்திற்கும் மேலாக உங்கள் மனைவி ஆரோக்கிய மாகவும்சந்தோஷமாகவும் குடும்பம்நடத்தவேண்டும்.

★ நீங்களும் இனிய இல்லறத்தின் இன்பத்தை பரி பூரணமாக அனுபவிக்க வேண்டும்

## இவைதானே உங்கள் ஆசைகள்?

அப்படியானல் இன்றே நாடுங்கள்

## குடும்பத் திட்டத்தை.

பிள்ளைகள் பெறுவதைத்தடுக்கமட்டுமல்ல, பிள்ளை இல்லாதவர்கள் பிள்ளைப் பாக்கியத்தை அடையவும் வழிவகுக்கிறது. குடும்பத் திட்டம்.

சகல விபரங் ளுக்கும் நேரிலோ, கடிதமூலமோ தொடர்பு கொள்ளுங்கள்.

## இலங்கை குடும்பத் திட்டத் தகவல் பிரிவு

இல. 457, 2-ம் மாடி கொழும்பு—3


நவ. 8

தென்னுபிரிக்காவில் சுரங்கமொன்றில் ஏற்பட்ட விபத்தில் 65 பேர் பலியானார்கள் உரோமியமும் தங்கமும் வெட்டி எடுப்பதில் இந்த சுரங்கத் தொழிலாளர் ஈடுபட்டிருந்தார்கள்.

## அராலியில் நடைபெற்ற விழா

அராலி, ஞாயிறு

அராலிக் கிராமத்தில் விவசாயப் பகுதி உத்தியோகத்தர்களால் கிராம பாடசாலைகளின் ஆசிரிய, மாணவர்களினதும் கிராம சபை பயிர்ச் செய்கைக் குழு உறுப்பினர்களினதும் ஒத்துழைப்போடு மரம் நாட்டு விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

சங்கானை விவசாய விஸ்தரிப்பு நிலையப் பொறுப்பதிகாரி திரு. சின்னையாவும் உணவு உற்பத்தி மேற்பார்வையாளர்கள், திரு. க. கனகசபையும் புளியமர விதைகள், பனங்கொட்டைகள், வேப்பமர விதைகள் ஆகியவற்றை விநியோகித்தனர். வட்டுக்கோட்டை மேற்கு, அராலி மேற்கு வடக்கு, அராலி தெற்கு-கிழக்கு கிராம சேவையாளர்கள் மூவரும் இதில் கலந்து கொண்டனர்.

## 'புகைப்பது கெடுதி என்று சிகரெட்டில் எழுதவேண்டும்'
### அமெரிக்க செனட்டில் தீர்மானம்

நியுயோர்க், நவ. 8

'அமெரிக்க சிகரெட் உற்பத்தியாளர்கள் தங்களது ஒவ்வொரு சிகரெட் பைக் கட்டுகளுக்குள்ளும் 'புகைப்பது கெடுதி' என்ற வாசகத்தை கண்டிப்பாக எழுதி வைக்கவேண்டும்' என்று கோரும் பிரேரணை அமெரிக்க செனட்சபை வர்த்தக கமிட்டியில் பத்துக்கு ஒன்பது என்ற வாக்கெடுப்பின்படி நிறைவேறியது.

1971-ம்வருடம் ஜனவரி முதலாம் திகதியிலிருந்த றேடியோ, டெலிவிசன் முதலியனவற்றில்வர்த்தகவிளம்பரங்களை நிறுத்துவதென்ற தீர்மானமும் இந்த வர்த்தக கமிட்டியில் நிறைவேறியது.

## புதிய ஜே பி

சுழிபுரம், ஞாயிறு

வட்டுக்கோட்டை கிராம சபை தலைவர் திரு.என். நிற்சிங்கம் புதிய சமாதான நீதிபதியாக யாழ்மாவட்ட நீதிபதி ஜனுப் எஸ்.இஸ்மயில் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

## வாலிபர்கள் தொண்டு

சுழிபுரம், சனி

வாலிபர்கள் முதியவர்கள் உட்பட சுமார் ஐம்பது பேர் தினமும் பண்ணாகம் தெற்கு விசவத்தனை முருகமூர்த்தி கோவில் பூந்தோட்ட புதிய சுவர் கட்டும் வேலையை சிரமதான முறையில் செய்து வருகின்றனர். கட்டிடமூலப் பொருள்கள் யாவும் ஊர் மக்களாலேயே இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு, ஞாயிறு

முல்லைத்தீவு தபால் நிலையத்தில் உதவித் தபாலதிபர்களாகக் கடமையாற்றும் கே. சிவபாதசுந்தரம், வி. பொன்னையா ஆகியோர் முறையே திருகே ணமலை முருங்கன் தபால் நிலையங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அமைச்சர் சபை தெரிவு வருமாறு:

பிரதமர்: சி. கணபதிப் பிள்ளை. நிதி: சூ. மரியாம் பிள்ளை, சுகாதாரம்: பி. பாக்கியநாதர்; கல்வி: இ. கனகேந்திரம், தொழில்: மு கிருஷ்ணன், கலாச்சாரம்: வே. பாலசுந்தரம், பாதுகாப்பு: கி. யோசேப்பு, விவசாயர்: கு. நா. ஞானப் பிரகாசம், விளையாட்டு: ஆ. ப. பிகுருடோ, உணவு: செ. கணேசலிங்கம், தபால்: த. கந்தசாமி.



வாடிக்கைக்காரர்கள் மற்றும் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது அன்புகலந்த

## தீபாவளி வாழ்த்துக்கள்!

# டயரும்ஸ்

54, மெயின் வீதி — யாழ்ப்பாணம்.

## செலவினங்களுக்குக் கடிவாளமிடுவது ஊஷா



ஊஷா விசிறிகள் உங்கள் மாதாந்தச் செலவைச் சுருக்குகின்றன; மின்சாரச் செலவுக் கட்டணத்தைக் குறைக்கின்றன; பராமரிப்பு விஷயத்தில் நீங்கள் பராமுகமாக இருந்துவிடலாம். உங்கள் இல்லத்தின் அழகுக்கு அழகு செய்யும் ஒயிலான வடிவங்களில் கிடைக்கின்றன.*

கீழ் லைடடுடனே லைட் இன்றியோ.



சிறந்ததை வாங்குங்கள்; ஊஷா எல்லாவற்றிலும் சிறந்தது

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி, மெயின் வீதி, ஆகியவற்றிலுள்ள ஊஷா விற்பனை நிலையங்களிலும் சாவகச்சேரி, சுன்னாகம், பருத்தித்துறை, அச்சுவேலி, கிளிநொச்சி, திருக்கோணமலை, அநுராதபுரம் மற்றும் நகரங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

எல்லோர்க்கும் எமது உளங்கனிந்த

## தீபாவளி வாழ்த்துக்கள்!

★ பூட்டுகள்
★ பிணைச்சல்கள்
சகலவித பொருட்களும்

★ யானை மார்க் அஸ்பெஸ்டர்ஸ் கூரைத் தகடுகள்

வெளிநாட்டில் தயாரித்த
முள்ளுக்கம்பிகள்
நீர்வேலிச் சங்கத்தினுல் தயாரிக்கப்பெற்ற
★ சிறந்த சீவல் கத்திகள்
★ பாக்குவெட்டிகள்
★ வீட்டுக் கத்திகள்
★ கிண்டிபிணைச்சல்கள்
ன்னும்
திறமான எத்தனையோ பாவனைப் பொருள்கள்

★ 'குரங்கு' மார்க்
தென்னுபிரிக்காவில் தயாரிக்கப்பெற்ற
"ஸ்பிரிட்"
'குரங்கு' மார்க்
தோட்ட மண்வெட்டிகள்

★ சிநேசம்
இன்னும்
திறமைவாய்ந்த பெயின்ற் வகைகள்
பித்தளைப்பூட்டுகள்
பிணைச்சல்கள்

குறைந்த விலையில் சிறந்த பொருள்கள்

# ஸ்டீல் சன்ஸ்

287-289 ஸ்ரான்லி வீதி, (தொலைபேசி: 7035) யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு 9-11-69 ஞாயிற்றுக்கிழமை 'ஈழநாடு' காரியாலயத்துக்கு விடுமுறையாதலால் 10-11-69 திங்கட்கிழமை மட்டும் 'ஈழநாடு' வெளிவரமாட்டாது.

### மணிவாக்கு

எல்லோருக்கும் எல்லா நல்ல சந்தர்ப்பங்களும் பாகுபாடின்றிக்கிடைக்கவேண்டும். இல்லாவிடில் ஜனநாயக அமைப்பு அர்த்தமற்றதாகிவிடும்.

—மகாத்மா காந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49 Jaffna. Telephone: 889

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஐப்பசி மாதம் 24-ந் திகதி (9-11-69)


## தீபாவளி

இன்று தீபாவளி. இந்துக்களின், குறிப்பாகத் தமிழர்களின் முக்கியமான பெருநாள்களில் ஒன்று. அதர்மத்தின் உருவான நரகாசுரன் அழிந்த நாள். அவன் உயிர் பிரியும்போது தான் செய்த கொடுமைகளுக்கெல்லாம் பிராயச் சித்தமாக தான் மாண்ட தினத்தை உலகம் ஆனந்தமாகக் கொண்டாட வேண்டுமென்று பரமாத்மாவைக் கேட்டுக் கொண்டானென்பது ஐதிகம். அத்தினமே தீபாவளி, நரகாசுரனின் கொடுமையைத்தாங்க முடியாது வேதனைப்பட்ட தேவரும்மக்களும்பரமாத்மா நீயேகதி' என்று அவன் மீது பாரத்தைப் போட்டனர் 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்' என்பதற்கு நரகாசுரன் கதையும் சான்று

இன்றும் மெலியாரைவலியார் துன்புறுத்துவதும் கொடுமைப்படுத்துவதும் இல்லாமலில்லை. வல்லரசுகள் சிறிய அரசுகளை மிரட்டி தங்கள் கைக்குள் வைத்திருக்கின்றன. அசுரனைவிட ஆபத்தான அணு ஆயுதங்களைஉற்பத்தி செய்து குவித்து வைத்து உலகைப் பயமுறுத்துகின்றன. சிறிய நாடுகளிலும்சரி பெரிய நாடுகளிலும் சரி பெரும்பான்மையினர் சிறுபான்மையினரை அடக்கி ஒடுக்கி வைக்கின்றனர் இனப் பிரச்னை மதப் பிரச்னை, மொழிப்பிரச்னையென்று ஒவ்வொரு பிரச்னையும் ஒவ்வொரு நரகாசுரர்களாகஉருவெடுத்து மக்களைக் கொடுமைப்படுத்துகின்றன.

இவற்றுக்கெல்லாம் தீர்வு கிடைக்க கொண்டுமானால் இறைபக்தி அவசியம். தர்மம் அழிந்து அதர்மம் தலைதூக்கும் காலை நான் மீண்டு அவதரிப்போன்' என்று பரமாத்மா கீதையில் கூறியிருக்கிறார். அவர்மீது நம்பிக்கை வைத்து 'நீயேகதி' பாரத்தைப் போட்டால் தர்மத்தை நிலைநாட்ட இறைவன் கருணை செய்வான் என்று நம்புவோமாக.

தீபாவளித் தினத்தைமகிழ்ச்சியுடன் கொண்டாடும் போது அந்தக் கொண்டாட்டம் சில இடங்களில் வேறு விதமாக முடிவடைந்து விடுவது,யாழ்ப்பாணப் பகுதியில் கடந்த காலங்களில் அனுபவ ரீதியாகக் கண்ட உண்மை. இம்முறை மக்கள் எல்லோரும் தீபாவளியைச் சிறந்த முறையில் மகிழ்ச்சி நிறைந்த நல்ல பொழுதாகக் களிப்பதற்கு யாழ்ப்பாணப் பகுதி பொலிசாரின் ஒத்துழைப்புடன் யானைபீடி ஸ்தாபனத்தாரின் உதவியுடன் ஈழநாடு ஸ்தாபனம் ஒழுங்கு செய்திருப்பது வாசக நேயர்கள் அறிந்ததே.

சீதாதேவியைத் தேடி அனுமான் இலங்கை வந்த போது 'ஆடினர் பாடினரா இக்களிக்கின்றாரல்லால் கவல் இன்றார் எவருமிலர்' என்று கூறியதாக கம்பராமாயணம் சொல்கிறது அனுமான்கண்ட இலங்கையில் மக்கள் எல்லோருமே ஆடியும் பாடியும் ஆனந்தமாகஇருந்தனர் ஒருவர்கூடக் கவலைப்பட்டிருக்கவில்லை. இன்றுள்ள இலங்கையின் நிலை வேறு ஆனாலும் ஆண்டில் ஒன்றிரண்டு நாட்களிலாவது மக்கள்களிப்புற்றிருக்க வேண்டாமா? கவலையை மறந்திருக்கக் கூடாதா? இதற்காகத்தான் யாழ்ப்பாணப்பகுதி மக்கள் இன்று யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் வண்டிச் சவாரியையும் திறந்தவெளியரங்கில்தலைசிறந்த கலைஞர்கள் கலந்து கொள்ளும ஆடல்பாடல் நாடக நிகழ்ச்சிகளையும் கண்டு களிப்பதற்கு ஈழநாடு பலரது ஒத்துழைப்புடனும் தீபாவளி விருந்து படைக்கிறது.

அதை அனுபவிக்க வாருங்களென 'ஈழநாடு' உங்களை அன்போடு அழைக்கிறது.

அமெரிக்க பள்ளிகளில்

# இன ஒதுக்கலை முற்றாக ஒழிக்க அதிபர் நிக்ஸன் சங்கற்பம்

வாஷிங்டன், நவ. 8

அமெரிக்க நாட்டின் பொதுப் பள்ளிக்கூடங்களிலே எங்கெல்லாம் இன ஒதுக்கல் இன்னும் இருக்கிறதோ அங்கெல்லாம்அதனை ஒழிக்கவேண்டும். இது தான் அமெரிக்க தலைமை நீதிமன்றத்தின் (சுப்ரீம்கோட்) புதிய கட்டளை. இந்தக் கட்டளையை நிறைவேற்ற "கூடுமான எல்லா வழிகளிலும் உதவி செய்யப்போவதாக அதிபர் நிக்ஸன் தெரிவித்துள்ளார். ஒவ்வொருவரும் சேர்ந்துபணியாற்றுவதனால் கட்டளையை நிறைவேற்றுகையில் ஏற்படும் நடைமுறை, பண்பு பற்றிய பிரச்னைகளை' சமாளிக்க முடியும் என்றார் அவர்.

"பள்ளிகளில் இன ஒதுக்கல் ஒழிப்பு நடக்க வேண்டியநேரம் பற்றியும்தலைமை நீதிமன்றம் முடிவாகக் கூறிவிட்டது" என்றார் அதிபர் ஒரு அறிக்கையில். இந்த அறிக்கையை நிருபர்களுக்கு அதிபரின் பத்திரிகைச் செயலாளர் ரொனல்டுஸீக்ளர் அன்மையில் வாசித்துக் காட்டினர்

"நடைமுறைப் பிரச்னைகளும் பண்புபற்றிய பிரச்னைகளும் இருக்கின்றன. மெய்தான்" என்றார் அதிபர். சட்டத்துக்கு முழு மதிப்புக் கொடுத்து நாம் அனைவரும் சேர்ந்து பணியாற்றுகையில் இந்தபிரச்னைகளை நாம் சமாளிக்க முடியும் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது என்றார்.

தெற்கில் இருக்கும் மிஸிஸிப்பி மாநிலத்தில் 14பள்ளி மாவட்டங்கள் குறித்து இக்கட்டளை பிறந்தது. ஆனால் இக்கட்டளை அமெரிக்க நாட்டின் எந்த இடத்திலும் செல்லக்கூடியது. இன ஒதுக்கல் ஒழிப்பில் மேற்கொண்டும் தாமதம் செய்வது அரசியல் சட்டப்படி இனி அனுமதிக்கக்கூடியதல்ல என்று நீதிமன்றம் தெளிவாகக் கூறிவிட்டது.

மேலே கூறப்பட்ட 14 பள்ளி மாவட்டங்களில் இன ஒதுக்கல் ஒழிப்பை அமுல் செய்ய மூன்று மாதம் அவகாசம்வேண்டுமென்று ஆட்சித் துறை இதற்கு முன்பு கோரியிருந்தது. 'இன ஒதுக்கல் ஒழிப்பை உடனடியாக அமுல்செய்தால் குழப்பமும் குழறுபடியும், மாணவர்களுக்குப் படிப்பிலே பெரும் தீங்கும் ஏற்படும்' என்று அது கூறியது

முன்பு இருந்த இப்பொழுதும் இருக்கும் திட்ட வட்டமான பொதுக் கொள்கையின் விளைவாக இன ஒதுக்கல் கடைப்பிடிக்கப்பட்டு வந்த பள்ளிக்கூடங்கள் மீது தான் அண்மை ஆண்டுகளில் நீதிமன்றத்தின் தாக்குதல் முக்கியமாக நடந்திருக்கிறது, இனஒதுக்கலில் பெரும் பகுதி அமெரிக்காவின்தென் பகுதியில்தான் காணப்படுகிறது. இங்கு இன ஒதுக்கல் நீண்டகாலமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு வந்துள்ள ஒரு சமுதாயம் அமைப்பாகும்.

அமெரிக்காவின்வட பகுதியிலும் மேற்குப் பகுதியிலும் இந்தக் காரணம் இல்லை எனவே எந்தப் பள்ளி மாவட்டமும் சட்ட விரோதமானது என்று அறிவிக்கப்படவில்லை.

ஆனால் அமெரிக்காவின் தென் பகுதிக்கு வெளியேயும் 'நடைமுறையில்' இன ஒதுக்கல் இல்லாமல் இல்லை, அந்த இடங்களில் வாழும் மக்களின் இனத்தைப் பொறுத்து ஏற்படும் ஒன்று இது

'எமதுவாலிபர்கள்

# பின்னேற்றத்தை நோக்கிப் பிரயாணம் செய்கிறார்களே'

— சாவகச்சேரி எம். பி.

மட்டுவில், ஞாயிறு

'உலகத்திலே வாலிபர்கள், தமது இனம், மொழி, நாடு ஆகியவற்றில் பற்று வைத்து, அவற்றின் உயர்ச்சிக்காகவும், வளர்ச்சிக்காகவும் தம்மை அர்ப்பணித்து விவசாயம், கைத்தொழில் போன்ற துறைகளில் அயராதுழைத்து முன்னேற்றத்தை நோக்கி முன்னேறி வருகையில், நமது வாலிபர்கள் எதையும் செய்யாது பின்னேற்றத்தை நோக்கி பிரயாணம் செய்வது மிக மிக வருத்தத்துக்குரியதாகும்.

சாவகச்சேரி இளைஞர் முன்னேற்றக் கழகக் கூட்டமொன்றிற்குத் தலைமை வகித்துப் பேசிய சாவகச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வ. ந. நவரத்தினம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கல்லடிமூட்டு, கழக மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

எமது வாலிபர்கள் மத்தியிலே நாட்டின் நலிவு சுழிவுகள், ஆட்சி அமைப்பு ஆகியவற்றை [illegible] ஆவல் பிறந்து விட்டால், பின் அவர்கள் மத்தியில் அதுமட்டுமன்றி தமது அரசியல் தலைவர்களைப் பற்றி எடை போட்டுக் கொள்ளவும் அவர்கள் தயங்க மாட்டார்கள் இன்று அவர்கள் எமது நாடு, மொழி இன வளர்ச்சியில் பார்வையாளர்களாக மட்டும் இருக்காமல் பங்காளிகளாகவும் மாற வேண்டும். சோர்வுக்கு இடம் கொடுக்காமல் எத்தொழிலையும் செய்ய வேண்டும்"

திரு எஸ். இராஜதுரை பேசுகையில், எமக்கு சலுகைகளை விட உரிமைகளே அவசியம், அவற்றை பெறுவதற்கே நாம் பாடுபட வேண்டும் என்றார்.

திரு. ச. ஸ்ரீஸ்கந்தராஜா உட்பட மேலும் பலர் பேசினர்.

—

சுழிபுரம், ஞாயிறு

வலிகாமம் மேற்கு ஐக்கிய பாற்பண்ணைச் சங்கத்தை மீண்டும் புனரமைப்புச் செய்து ஏழை மக்களுக்கு நல்ல பால் வாங்கவும் விற்கவும் உதவுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கோரும் ஒரு மகஜர் மேற்படி சங்[illegible] சங்கத்தவர் சில[illegible] அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. சிலர் கூட்டுறவுப் பகுதியினரை நேரில் சந்[illegible]

## இம்மாதம் 30ல் பரீட்சை

உரும்பராய், ஞாயிறு

வலிகாமம் கிழக்குத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் சார்பிலான மூன்றும், நான்காம் வகுப்புப் பரீட்சைகள் இம்மாதம் 30-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கின்றன.

பரீட்சைக் காரியதரிசி திரு. அ. பஞ்சாட்சரம் இது பற்றி வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளார்.

வலிகாமம் கிழக்குத் தமிழ் ஆசிரியர் சங்கம் முதன் முதலாக நடாத்தவிருக்கும் இப்பரீட்சைக்கு கோப்பாய் வடாரப் பாடசாலைகளிலிருந்து மட்டும் 1600க்கு மேற்பட்ட மாணவர்கள் தோற்றவிருக்கிறார்கள்.

—

## இடைத் தேர்தல்

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் கிராம சபை இரண்டாம் வட்டார இடைத்தேர்தலுக்கான நியமனப்பத்திரம் சென்ற புதன்கிழமை தாக்கல் செய்யப்பட்டது.

திரு. கே. தர்மலிங்கம், திரு. வ. அமிர்தலிங்கம் ஆகிய இருவரும் நியமனப் பத்திரம் தாக்கல்செய்தனர். அடுத்த மாதம் தேர்தல் நடைபெறும்.

—

## ஆவலுடன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாவகச்சேரி பஞ்சாபகேசன் குழுவினர், இனிக்கும் கைடிதட ழனிமலை குழுவினர் மங்கள இசையில் குளிர்ந்து நிற்கும் உங்களை தீபாலங்காரமேற்றி யாழ்நகரமேயர் ஒளி கூட்டுவார் தீபவழி காட்டுவார்.

நடனக் கலைகாக்கும் கீதாஞ்சலி நல்லையாவிடம் முறையாகப்பயின்ற மாணவியின் சதங்கை ஒலி மாலைமயங்கும் 6-20க்கு அரங்கிற் கேட்கும்

பகையற்ற நகை செலவற்றுப்பெற ராஜ் நகைச்சுவை நாடக மன்றத்தினரின்சக்கடத்தார் முதல் பகுதி உதவும்

சிரிப்பால் வயிற்று நோ எடுக்கும் உங்களை 'ஸ்கைலைன்ஸ்'கோஷ்டியினர் தமது பாண்ட் வாத்தியத்தால் சிறிது சாந்தப்படுத்துவார்கள். அவர்களின் மயக்கும் இசையில் மயங்கி நிற்கும் உங்களை இரவு 7 மணிக்கு செப்புநடனம் திசைதிருப்பும் செம்புநீர் எடுக்க மட்டுமல்ல விழாக்கள் எடுக்கும் போது பயன் படும் என்பதை கலாஷேத்திர மாணவிகள் நிரூபிப்பார்கள்

வெடியரசன் கலாமன்றத்தினரின் வாங்கநாடகம்

# நாட்டிலும் நகரிலும்

இந்தியாவிலுள்ள தமிழர்கள் இன்று காலையில் ஒருவரையொருவர் சந்திக்கும்போது 'வாங்கோ சௌக்கியமா?' என்று வழக்கம் போலஅழைப்பதைவிடுத்து, 'நமஸ்காரம், கங்காஸ்நானம் ஆச்சோ! என்று குசலம் விசாரிப்பார்கள்.

எங்கள் நாட்டில் காலையில் அல்லாவிட்டாலும் மாலையிலாவது 'எண்ணைதேய்த்து முழுகியாச்சோ, எப்பிடி தீபாவளி?' என்று விழிப்பார்கள்.

இரண்டு கேள்விகளும் ஒரு கடமையைத்தான் குறிக்கும் காலையில் எண்ணெய் ஸ்நானம் பண்ணி புறத்தூய்மை பெற்று, அகத்தூய்மையுடன் புத்தாடை புனைந்து, இறைவன் சன்னிதியில் சென்று வழிபட்டு, பின்பு உற்றார் உறவினருடன் கலந்து விருந்துண்டு இருப்பவர்களுக்கு எனது மனப்பூர்வமான தீபாவளி வாழ்த்துக்கள் உரித்தாகுக.

அப்படியானால் மற்றவர்களுக்கு வாழ்த்து இல்லையோ, என்று கேட்கலாம். உண்டு, உண்டு, தாராளமாகஉண்டு மேற்கூறிய புனிதமானசடங்குகளை அலட்சியம் செய்துவிட்டு சூதாட்டம், நீராட்டம் முதலிய களியாட்டங்களில் ஈடுபடுவோருக்கு எனது வாழ்த்துக்களுடன் கூடவே ஆண்டவனின் கிருபையும் கிட்டுவதாகுக!

உலகில் தீமை அகன்று நல்ல காலத்தின் அறிகுறியாக ஒளிக்கதிர்கள் வீசுகின்ற இன்றையதினம் எல்லோரும் களியுற வேண்டியதுதான், ஆனால் களியுறுவதிலும்தான் எத்தனை விதங்கள் உண்டு.

இன்று பிற்பகல் யாழ்ப்பாணம் முற்றவெளிக்கு வருகிறவர்கள் உண்மையிலேயே களி பேருவகை அடையத்தான்போகிறார்கள். 'ஈழநாடு' அளிக்கும் இன்றைய பெருவிழாவில் பாலர் விருத்தர். ஆண்கள், பெண்கள் என்ற வேறுபாடுகள் இல்லாமல் எல்லோரும் ஒருங்கே கண்டும் கேட்டும் களியுறத்தக்க அம்சங்கள் பல இடம் பெறுகின்றன. இவற்றின் விபரங்களை பிறிதொரு பக்கத்தில் காணலாம்.

மாட்டுவண்டிச் சவாரி இப்பொழுது யாழ்ப்பாணத்து மக்களின் மனதில் மிகவும் ஸ்திரமாக இடம் பெற்றுவிட்டது. சைக்கிள்களும் மோட்டார் சைக்கிள்களும், கார், ட்ரக்டர் முதலியனவும் மலிந்துபோன இந்தக்காலத்தில் மாட்டுச் சவாரிவிடும் இந்தப் பழைய விளையாட்டு அநாகரீகமானதென்று கைவிடப்பட்டுவிடுமோஎன்று எண்ணினேன். ஆனால் அப்படி நடக்கவில்லை. யாழ்ப்பாணத்தில் இன்னும் சவாரிமாடுகள் வாழ்கின்றன என்பதை இன்று முற்றவெளியில் காணலாம்.

சுமார் முப்பது, நாற்பது வருடங்களுக்கு முன்பு மருதனமடம் சந்தியிலிருந்து உரும்பராய்க்குப்போகும் வழியில் மருதனமடம் ரயில் நிலையம் வரையுள்ள தெருவில் ஒவ்வொரு சனிக்கிழமையும் மாட்டுச் சவாரி நடக்கும். அந்தக் காலத்தில் சினிமா அதிகம்கிடையாது. ஆகையால் இளங்காளைகளுக்கு (நாலு காலும், இரண்டு காலும்) இது ஒரு பெரிய பொழுது போக்கு. கார்கள், பஸ்கள், சைக்கிள்களும் மிகக்குறைவு. எனவே தார் போட்ட தெருக்களும் குறைவு. தார் போடாத இந்தத் தெருவில் நடக்கும் மாட்டுச் சவாரிக்கு யாழ்ப்பாணத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் போட்டி போட வருவார்கள். கொம்புக்கு முடியும், கழுத்துக்கு சலங்கைக் கோர்வையும் பூண்ட நாம்பன்கள் இளமை முறுக்குடன் வீறு நடைபோட்டு சவாரிக்கு வந்து சேரும். அவற்றின் உடலில் ஈ இருந்தால் வழுக்கிவிழுந்துவிடுமோ என்று அவ்வளவு பளபளப்பாக மினுங்கும்.

குதிரைப் பந்தயங்களில் குதிரைகளுக்குசிலர் 'டோப்' கொடுப்பதுண்டு. மாடுகளுக்கு அந்தவிதமான போதை ஒன்றும் கொடுப்பதில்லை. ஆனால் அவற்றை வேகமாக ஓட வைப்பதற்கு வாலை முறுக்குவது, வால்நுனியைக் கடிப்பது, தடியில் கூரான ஆணி ஏற்றிவைத்து அதால் குத்துவது போன்ற மருந்துகள் உபயோகிக்கப்படும். மாடுகள் அவஸ்தை தாங்காமல் ஓவென்று பயங்கரமாக அலறுவதுமுண்டு.

இரண்டுவண்டிகள் ஒன்றோடொன்றுவரிசையாக சவாரி செய்யும்போது சக்கரங்களினால் ஏற்பட்ட பள்ளம் அந்தச்சாலையில் நான்கு வாய்க்கால் வெட்டிவிட்டதுபோலிருக்கும், ரப்பர் சக்கரங்களும் தார் தெருக்களும் வரத் தொடங்கியபின்பு இந்த வாய்க்கால்கள் மேவப்பட்டுவிட்டன அத்துடன் அங்கே மாட்டு வண்டிச் சவாரியும் நின்று போய்விட்டது.

—வழிப்போக்கன்

சகதி வாய்ந்த

சிதம்பரத்திற்குச் சொந்தமான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைபக்தி அவசியம். தர் யாழ்ப்பாணப்பகுதி மக்கள்
மம் அழிந்து அதர்மம் தலை இன்று யாழ்ப்பாண ம்

ங்களென 'ஈழநாடு' உங்களை
அன்போடு அழைக்கிறது.


சகதி வாய்நத
சர்வ பூச்சி நாசினி

# பொலிடோல் ஈ-605




எல்லாக் கிருமிப் பீடைகளையும் இல்லாதொழித்து, பயிர்கள் செழிக்கவும் விளைச்சல் பெருகவும் செய்வது பொலிடோல்.

அழுக்கணவன், ஒட்டுண்ணி, பயிர்ப்பேன், பனிப்பூச்சி, இலையரிப் புழு போன்றவற்றை அது அடியோடு தொலைத்து விடும்.


நெல், புகையிலை, உருளைக்கிழங்கு, மிளகாய், வெங்காயம், காய்கறி முதலிய எவ்வித பயிர்ச் செய்கையையும் பாதிக்கும் எல்லாவித பூச்சி, புழுக்கள், கிருமிகளையும் அழிக்கும் சக்தி வாய்ந்தது — பொலிடோல்.

பொலிடோலின் விலையில் எவ்வித மாற்றமுமில்லை.

100 சி. சி. ( 4 அவுன்ஸ்) விலை = ரு. 5/-
250 சி. சி. ( 9 அவுன்ஸ்) விலை = ரு. 10/-
1000 சி. சி. (35 அவுன்ஸ்) விலை = ரு. 35/-

பொலிடோல் ஒரு பேயர் தயாரிப்பு. நம்பிக்கையான விஷயமறிந்த விநியோகஸ்தரிடம் கிடைக்கும். இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

பயிர்களைக் காத்துப் பண லாபம் பெறப் பாவியுங்கள் பேயர் விவசாய ரசாயனப் பொருள்கள்.



மூலப் பொருட் சத்து
உற்பத்தியாளர்:
பேயர்,
ஜெர்மனி

BAYER

இலங்கையில் தயாரிப்போர்:
ஹேக்கெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.

P.9913


கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

எமது வாலிபர்கள் மத்தியிலே நாட்டின் நலிவு சுழிவுகள், ஆட்சி அமைப்பு ஆகியவற்றை அறியும் ஆவல் பிறந்து விட்டால, பின் அவர்கள் மத்தியில் எவரும் அதை இதைக் கூறி ஏமாற்ற முடியாது.

செய்து ஏழை மக்களுக்கு நல்ல பால் வாங்கவும் விற்கவும் உதவுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கோரும் ஒரு மகஜர் மேற்படி சங்கத்தின் அங்கத்தவர் சிலரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. சிலர் கூட்டுறவுப் பகுதியினரை நேரில் சந்தித்து இதுசம்பந்தமாகப் பேசியுள்ளதாகத் தெரிகிறது

# இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 24-ந் திகதி (9-11-69)

**சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை**

**மேஷம்-** மனநிறைவுக்கு இடமுண்டு மதிநுட்பத்தின் மூலம் மற்றவாகளின் செல்வாக்கை பெறுவீர்கள். குடும்ப வழியால் சுகம் கிடைக்கும். சிலர் வாழ்க்கையில் திடீர் திருமணமும் இடம்பெறலாம் சுபதினம்.

**ரிஷிபம்-** பல வழிகளிலும் பணம் பாழாகும். வேண்டாத விருந்தினர்களின் வருகை உங்களுக்கு வேதனையைத் தரலாம். நண்பர் ஒருவரின் உடல்நலம் பாதிக்கப் படலாம். எதையும் தாங்கும் இதயம் வேண்டும்.

**மிதுனம்-** பெரியோரைப் பேணுவதன் மூலம் பெரிய காரியங்களைச் சாதிப்பீர்கள். பொதுத்துறையில் அதிக புகழ்கிடைக்கும். சிலருக்கு அரசியலிலும் அதிக ஆர்வம் பிறக்கலாம். மகிழ்ச்சியான தினம்.

**கடகம்-** வியாபாரத்தில் முன்னேற்றம் தென்படுகிறது. நினைத்ததைச் சாதிப்பதில் வெற்றியடைவீர்கள. வீட்டில் சுபகருமமொன்றுக்கு வழிவகை காணப்படும். செலவுக்கு வேண்டிய பணம் தாராளமாகக் கிடைக்கும்.

**சிம்மம்:** கூட்டுவியாபாரத்தில் முன்னேற்றம் உண்டு. வெளியூரிலிருந்து திருப்திகரமான செய்தி கிடைக்கும். க மையில் ஆர்வம் பிறக்கும். டாக்டர்களுக்குச் செல்வாக்கும் பெருகும். நிம்மதியான தினம்.

**கன்னி-** மனதில் விரக்திநிலை தென்படும், உடல்நலமும் பாதிக்கப்படலாம். கால் நடைகளினுல் நஷ்டம் ஏற்படும் பூமிப் பிணககுகளின்மூலம் வழக்கு விவகாரங்களிலும் மாட்டிக்கொள்ள நேரிடலாம்.

**துலாம்-** முன்னேற்றம் தடைப்படும் குறுக்குவழி தலையீடு குழப்பத்தை ஏற்படுத்தலாம். எதேச்சாதிகாரப் போக்கால் சிலரைப் பகைத்துக்கொள்ள நேரிடும். அமைதி நன்று.

**விருச்சிகம்-** பரந்த மனப்பான்மையுடன் செயலாற்றுவீர்கள். பொதுப்பணிகளில் அதிக ஈடுபாடு ஏற்படும் பிதா வழி மூலம்ஆதரவு கிடைக்கும். பொதுமக்கள் மத்தியில் செல்வாக்குப் பெருகும். அரசியல் வாதிகளுக்கு நன்மையுண்டு.

**தனுசு-** பணமுடையுடன்பந்துக்களின்நெருக்கடிகளும்ஏற்படும். மனக் கோட்டையில் வெடிப்புத் தோன்றும். தொழில்துறையின் சகாக்களின் தொல்லைகளுக்கு இடமுண்டு. அடக்கம் வேண்டும்.

**மகரம்-** மாணவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான தினம் கல்வித்துறையில் முன்னேற்றம் உண்டு, தாய் வழி ஆதரவு தாராளமாக கிடைக்கும். வாகன நலனுக்கு இடமுண்டு.

**கும்பம்-** இதயத்தில் அமைதி குன்றும் குடும்பத்தில்சிறிய பூசல்கள் தோன்றி மறையும் சிறியவிஷயத்திற்கும்அதிக கோபம் தோன்றக்கூடும், எதிலும் புதுமைகாண விரும்புவீர்கள்.

**மீனம்-** கூர்மையான ஆயுதங்களுடன் பழகாதிருக்கவும் போக்குவரத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும். திடீர் திருப்பம் உங்களை திகைக்க வைக்கலாம், பேச்சை குறைக்கவும்.


இப்பத்திரிகை ஈழநாடுலிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு நவம்பர் மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


உங்களை இரவு 7 மணிக்கு செம்புநடனம் திசைதிருப்பும் செம்புநீர் எடுக்க மட்டுமல்ல விழாக்கள் எடுக்கும் போது பயன் படும் என்பதை கலாஷேத்திரமாணவிகள் நிரூபிப்பார்கள்

வெடியரசன் கலாமன்றத்தினரின் ஓரங்கநாடகம் 'இயமதர்மனின் தீர்ப்பு' நீங்கள் நல்ல தீர்ப்பளிப்பீர்கள் என்பது நம்பிக்கை

நடனக்கலையின் தோகை விரித்தாடும் மயில் நடனம் 7-30க்கு மேடையில் நடைபெறும்

சிவன்-பார்வதிநடனத்தையும் திருநெல்வேலி பார்வதி கலாமன்றத்தினரே அளிக்கின்றனர் திருமதி ஞானமணி செல்லையாவிடம் முறையாகப் பயின்றமணிகள இந்த நடனங்களை அளிக்கிருர்கள்.

முப்பது நிமிட நேரத்தில் ஒரு முழுமையான நாடகம் நாடகம் கற்புக்கனல் தயாரிப்பு அரியாலை நாடகமன்றத்தினர்

கலாவிநோதன் கணபதிப்பிள்ளை குழுவினரின் வில்லுப்பாட்டு பத்திரிகை 'எப்படிப் பிறந்தது என்ற கதைகூறும்.

இரவு 9 மணிக்கு சக்கடத்தார் இரண்டாம் பகுதியை நடத்துவார்.

இரவின் குளிர்மையில் மெல்லிசை மிதந்துவரும் நேரம் 9-20 இருகைகள் சேரும்பொழுதுதானே ஓசை வருகிறது. இந்தமெல்லிசையை எழுப்புபவர்கள் இரட்டையர்குழு

கானமழைபொழியும் கண்ணன்கோஷ்டியினரின் மெல்லிசையை இரவு 10-25வரை நீங்கள்கேட்டு இன்புறலாம்.

'வாணவேடிக்கை' உங்களின் குரல் கேட்கிறது.

இரவு 10-30க்கு அந்தக் காட்சியை நீங்கள் பார்த்து ரசிக்கலாம் சுன்னுகம் திருதாமோதரம்பிள்ளை தமது திறமையின் உயர்வை வெளிப்படுத்தப்போகிருர்'

கண்ணியமான மக்களின் அன்பு உறவினர்கள்போலிருந்து கடமைபுரியும் வடபகுதி பொலிஸார் உதவிக்காக காத்து நின்று ஒத்துழைக்க முன்வந்துள்ளனர், பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் இதற்கான எல்லா ஒழுங்குகளையும் செய்துவிட்டார்

எங்கெல்லாமோ இருந்து நாங்கள் 'ஈழநாடு' தீபாவளிப் பெருவிழாவைப்பார்க்க வருகிருேமே எப்படித் திரும்புவது என்று கேட்கிறீர்களா? கலைவிழா முடிந்ததும் யாழ் குடாநாட்டின் சகலபாதைகளுக்கும் விசேஷ இ. போ. ச. பஸ் சேவை ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளனவாருங்கள்! வாருங்கள்!!

தத மக்களின் மனதில் மிகவும் ஸ்திரமாக இடம் பெற்றுவிட்டது. சைக்கிள்களும் மோட்டார் சைக்கிள்களும், கார், ட்ரக்டர் முதலியனவும் மலிந்துபோன

தொடங்கியபின்பு இந்த வாய்க்கால்கள் மேவப்பட்டு விட்டன அத்துடன் அங்கே மாட்டு வண்டிச் சவாரியும் நின்று போய்விட்டது.

— வழிப்போக்கன்

சிதம்பரத்திற்குச் சொந்தமான

## 100 பரப்புக்காணிகளை அரசாங்கம் பொறுப்பேற்றது

சுழிபுரம், ஞாயிறு

தொல்புரம் சிதம்பரம் மாணுமுதலியார் மடத்துக்கு சொந்தமான, தொல்புரம், சுழிபுரம், கொட்டைக்காடு யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலுள்ள நூறுபரப்பு நிலங்கள் இலங்கை அரசாங்கத்தினுல் பொறுப்பேற்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணப் பகுதியில் நிலம் இல்லாது வாழும் சிறுபான்மைத் தமிழர்களுக்கு இந்நிலங்கள் வீடுகள் கட்டுவதற்குப் பயன்படுத்தப்படவிருப்பதாகத் தெரியவருகின்றது.

தீபாவளிப்பரிசு

## நண்பனுக்கு!

—வி. இ. சிந்தனைச்செல்வன்—

தித்திக்கும் தீபநாள் வந்ததடா நண்பா
தீயவை இன்று மறைந்ததடா
எத்திக்கும் இன்னல் ஒழிந்ததடா—உள்ளம்
இன்பத்தால் துள்ளி குதிக்குதடா!

( 2 )

பட்டாசுக் கட்டுகள் வெடிக்குதடா — மனம்
பண்பட நெஞ்சம் குளிருதடா
சிட்டாக நாமும் பறப்போமடா நல்ல
செயல்களையே எங்கும் செய்வோமடா.

(3)

இல்லார்க்கு உதவிகள் புரிவோமடா — இன்றே
இல்லாமை இல்லாமல் செய்வோமடா.
நல்லோர்க்கு நல்லோராய் இருப்போமடா—இங்கே
நஞ்சர்க்கு நாம்யம னுவோமடா.

## தீபாவளி

— இ. பேர்னுட் —

எத்திக்கும் கொண்டாடும் திருநாளாம் — அது
தித்திக்கும் தீவாளித் திருநாளாம்
புத்திக்கும் எட்டாது இதன்மாண்பாம் — எச்
சக்திக்கும் புரியாது இதன்உயர்வாம்!

( 2 )

பட்டாடை புத்தாடை புனைவோமே
கட்டாகப் பட்டாசு சுடுவோமே
தித்திக்கும் தீன்பண்டம் சுவைப்போமே
சக்திக்கும் அன்பாகப் படைப்போமே,

( 3 )

இன்புறும் நாளிது இன்புறுவோம்
அன்பர்க்கும் வாழ்த்துக்கள் வழங்கிடுவோம்
துன்பத்தைப் போக்கிய நாளிதென்று
இன்புற்று நாமிங்கு வாழ்ந்திடுவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org